REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 2உ வியாழன் (18—8—55) ★ ★ வெளியூர்: ஆவணி 3உ வெள்ளி (19—8—55) [இதழ் 56

## செயற்கை நிலநடுக்க சோதனை

ஜப்பானில், டோக்கியோ நகருக்கு வடக்கே 100 கல் தொலைதூரத்திற்கு அப்பாலுள்ள ஈாஜோரி எரிக்கரையில் செயற்கை பூகம்பம் ஏற்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த எரிக்கரையில், 8 சுரங்கங்களுக்குள் 1½-டன் வெடி மருந்துகள் வைத்து வெடிக்கப்பட்டனவாம்; இதன் விளைவுகள் 9 இடங்களில் பதிவு செய்யப்பட்டனவாம்.

பூமியின் மேல்பரப்பு அமைப்பை சோதனை செய்யவும், பூகம்பம் வருவதை முன்கூட்டியே தெரிந்துகொள்ளவும் இந்த சோதனைகள் பயன்படுமாம். இதுபோலவே, இன்னும் சில செயற்கை பூகம்ப பரிசோதனைகள் நடத்தவும் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

# சிங்கக் கொடியை எதிர்த்த தமிழனின் வீரம்!

# சென்னையில் கோவா வீரர்களுக்கு வீர வணக்கம்

## திராவிட முன்னேற்றக்கழகக் கொடி தாழப் பறக்கவிடப்பட்டது

### நகர் முழுவதும் தொழில் நிறுத்தம்

### மாபெரும் அனுதாப ஊர்வலம்

கோவா விடுதலைப் போர்க்களத்தில் விழ்ந்த வீரர்களுக்கு, இன்று, சென்னை, வீர வணக்கம் செலுத்துகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்தில், கொடி தாழ்ந்து பறந்து கொண்டிருக்கிறது.

தொழில் நிலையங்கள், கடைகள், ஓட்டல்கள் பலவும் மூடப்பட்டதுடன், போக்குவரத்துக்களும் நின்றுவிட்டதால், சென்னை வெறிச்சோடிவிட்டது.

பாங்கிகள் திறக்கப்பட்டிருந்தாலும், நடைமுறை வேலைகளில் செயலற்று விட்டன.

ஈவிரக்கமின்றி தொண்டர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதையொட்டி இன்று நடைபெறும் மாபெரும் கண்டன ஊர்வலத்தில் தி. மு. கழகம் பெரும் பங்கு ஏற்கிறது.

இரண்டு நிமிட நேரம் மௌனமாக நின்று, தியாகிகளுக்குத் தங்களுடைய வணக்கத்தைச் செலுத்திவிட்டு, நேற்றைய சட்டசபை கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது; நிராயுதபாணிகளான மக்களை மிருகத்தனமாகச் சுட்டு வீழ்த்திய போர்ச்சுகீசிய சர்க்காரை வன்மையாகக் கண்டித்து, தீர்மானமொன்று நிறைவேற்றியது.

"கவர்னர் என்ற முறையில், அரசியல் சட்ட ரீதியில் என்னுடைய நிலைமை எப்படியிருப்பினும், 'மனிதன்' என்ற முறையில், கோவாவில் நடக்கும் சம்பவங்கள் குறித்து, என்னுடைய ஆட்சேபணையைத் தெரிவிக்காமலிருக்க முடியவில்லை" என்று சென்னை கவர்னர், சட்டப் பயிற்சியினர் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

இன்று காலை நகரிலுள்ள முக்கிய தொழிற்சாலைகளனைத்தும் மூடப்பட்டன; அத்தொழிற்சாலைகளில் பணியாற்றும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் கழகக் கொடிகளை ஏந்தி, மற்ற தொழிலாளர்களுடன் ஊர்வலமாகச்சென்று தங்களின் அனுதாபத்தைத் தெரிவித்தனர். (விபரங்கள் நாளை வெளிவரும்.)

நகரிலுள்ள எல்லா தி. மு. க. கிளைக் கழகங்களிலும் கழகக் கொடி தாழ பறக்கவிடப்பட்டது.

## மீண்டும் நுழையப் போகிறார்களாம்!

பெல்காம், ஆக. 17—

இத்திங்கள் 19-ந் தேதியன்று, பெல்காமிலிருந்து 1000 நிராயுதபாணிகளான 'சத்தியாக்கிரகி'கள் கோவாவிற்குள் நுழைவது என்று சர்வ கட்சி கோவா விடுதலை உதவிக் குழு தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

## யுத்தக் கப்பல் வந்துள்ளதாம்!

புனா, ஆக. 16—

டையூவிற்கு (போர்ச்சுகல் திட்டு) ஒரு போர்ச்சுகீசிய யுத்தக் கப்பல் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

# கொத்தலாவலையின் ஓரவஞ்சனைக்கு சூடு!

## மக்கள் சபை உறுப்பினர் பதவியினின்றும் இரண்டாம் முறையாக விலகல்

### தோழர் சுந்தரலிங்கத்தின் நடவடிக்கை

கொழும்பு, ஆக. 17—

"இலங்கையில் உள்ள தமிழர்களின் நிலை, இன்று, மிக ஆபத்தானதாயுள்ளது; தற்போதைய நிலையில், அவர்களது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன;

"எனவே, கொத்தலாவலை சர்க்காரின் இந்த ஓரவஞ்சனைப் போக்கைக் குறித்து எனது தொகுதி வாக்காளர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்காக, நான், எனது மக்கள் சபை உறுப்பினர் பதவியை இராஜிநாமாச் செய்கிறேன்"

—என்று, இலங்கைத் தமிழர் தலைவர் சி. சுந்தரலிங்கம் அறிவித்திருக்கிறார்.

ஒரு அரசியல் பிரச்சினைக்காக, இவர், பதவியை இராஜிநாமாச் செய்வது, இது இரண்டாவது முறையாகும்.

முதல் முறை, 'சிங்கக் கொடியை இலங்கை மக்கள் ஏற்றுக்கொள்வது கூடாது,' என்றும், அப்படி ஏற்றுக் கொள்வது, இலங்கைவாழ் தமிழர்களைப் புண்படுத்தக் கூடியது என்றும் கூறி, அவர், முதன்முதலில் பதவியை இராஜிநாமாச் செய்திருக்கிறார்.

"நிர்வாக உத்தியோகங்கள், நிலமற்றோருக்கு நிலம் தருதல், மொழிப் பிரச்சினை ஆகியவற்றில் கொத்தலாவலை சர்க்கார், தமிழர்களுக்கு ஓரவஞ்சனை இழைக்கிறது; தமிழர்கள் ஒரு கூட்டுச் சமுதாயத்தின் கவுரவமிக்க பகுதியினர் என்று எண்ண வேண்டுமானால், அவர்களுக்கு நேர்ந்துள்ள இந்தக் குறைபாடுகள் நீக்கப்பட்டாக வேண்டும்,"

என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

# கோவா போராட்ட விளைவுகள்

## மக்கள் சபையில் பண்டித நேரு விளக்கம்

### தூதுவராலயச் சேதங்களுக்கு நஷ்டஈடு தரப்படும்

"கடந்த ஆகஸ்டு 15-ந் தேதியன்று, கோவாவிற்குள் 1,711 பேர்களும், டாமனுக்குள் 1,249 பேர்களும் நுழைந்தனர்; திரும்பி வந்தவர்களின் எண்ணிக்கை—கோவாவிலிருந்து 1,691 பேர்; டாமனிலிருந்து, 1,224 பேர் என்று அதிகாரபூர்வமாகக் கிடைத்த தகவல்களிலிருந்து தெரிகிறது,"

என்று, பிரதமர் நேரு, மக்கள் சபையில் விடுத்த சிறிய அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

கோவா எல்லைக்குள்ளேயே கடந்த ஆகஸ்டு 14, 15-ந் தேதிகளில் கோவானியர் சிலர் போராட்டம் நடத்தியதாகவும், 70 பேர் வரையில் சிறை பிடிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

கோவா 'சத்தியாக்கிரகிகள் மீது போர்ச்சுகீசியர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் எதிரொலியாக, ஆர்ப்பாட்டக்காரர்களால், இந்தியாவில் உள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கு ஏதேனும் சேதங்கள் விளைவிக்கப்பட்டிருந்தால்; அந்த சேதங்களுக்கு நஷ்டஈடு தந்து விடுவதாக அறிவித்திருக்கிறார்.

"நம்முடைய நாட்டில் உள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கு நாம் மரியாதையும், பாதுகாப்பும் தரமுடியாவிட்டால், வெளிநாடுகளில் உள்ள நமது தூதுவராலயங்களுக்கு மதிப்பு எதிர்பார்க்க முடியாது; கோவாவில் நடைபெற்ற சம்பவங்களுக்காக, இந்தியாவில் உள்ள தூதுவராலயங்கள் முன் ஆர்ப்பாட்டம் செய்வது இந்தியாவின் கௌரவத்திற்கு உகந்தது அல்ல," என்றும் நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

ராஜ்ய சபையில், பண்டிதபந்த் இதே ரீதியில் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

மேலும், பாண்டுங்கில் நடைபெற்ற ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டில் கோவா பிரச்சினை பற்றி பேசவில்லை என்றும், பொதுவாக காலனி ஆதிக்க ஒழிப்பு பற்றியே பேசப்பட்டதாயும் பண்டித நேரு, ராஜ்யங்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

## வீரர்கள் சடலம் தகனமாயின!

பெல்காம், ஆக. 16—

போர்ச்சுகீசியப் போலீசாரின் துப்பாக்கிக்குண்டுகளுக்கு இரையான மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த மாதசிங், பாபுலால், விஜயவாடாவைச் சேர்ந்த மாணவத் தோழர் எஸ். எஸ். இரா

(4-ம் பக்கம் பார்க்க)

# 'சுதந்திரம் கோருவோரை சுட்டு வீழ்த்துவது 1955-ல் ஆச்சரியமானதாயுள்ளது'

## 'போர்ச்சுகீசியர் நவீன காலத்தைப் புரிந்துகொள்ளட்டும்'

### குடியரசுத் தலைவர் இராசேந்திரர் கூறுகிறார்

கர்னூல், ஆக. 17—

"சுதந்திரம் வேண்டுமென்ற கோரிக்கையை ஒரு மக்கள் கூட்டம் அல்லது ஒரு நாட்டவர் எழுப்பினால், அதற்காக இந்த 1955-ம் ஆண்டிலும் துப்பாக்கிக் குண்டுகளை வீசுவதோ அல்லது சிறையைக் காட்டி அச்சுறுத்துவதோ, ஆச்சரியமாக இருக்கிறது;

"போர்ச்சுகீசிய சர்க்கார் நவீன கால நிலைகளைத் தெரிந்துகொண்டிருந்தால், இந்தியாவில் தங்களின் ஆதிக்கத்தில் உள்ள பகுதிகளின் எதிர்காலத்தைத் தெரிந்துகொள்வதில் சந்தேகமிருக்க முடியாது; என்ன நிகழ்ந்தாலும், அவர்கள் என்னதான் தடுத்தாலும், கோவா அவர்களது ஆதிக்கத்தில் இனியும் இருக்க முடியாது,"

என்று, குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் கூட்டமொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

## ★ உடலுள் பாய்ந்தபின் வெடிக்கும் குண்டுகள்!

### உலகத் தடையை மீறி பிரயோகித்துள்ளனர்

### விடுதலைத் தொண்டர்கள் மீது போர்ச்சுகீசியர் நடவடிக்கை

புதுடில்லி, ஆக. 17—

இந்திய சுதந்திர தினத்தன்று கோவாவிற்குள் நுழைந்த இந்திய சத்தியாக்கிரகிகள் மீது, போர்ச்சுகீசியப் போலீசார் மிருகத்தனமாக 'டம்டம்' தோட்டா'க்களைக் கொண்ட துப்பாக்கிகளை உபயோகித்தனராம்.

'டம்டம்' தோட்டாக்களை யாருமே உபயோகிக்கக்கூடாது'—என்று அகில உலகிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது; அந்தத் தடையையும்/மீறி போர்ச்சுகீசியப்

(4-ம் பக்கம் பார்க்க.)

# விடுதலை கோரும் மக்களை

## எந்த சக்தியும் தடுக்க முடியாது

"ஒரு நாட்டு மக்கள், விடுதலை பெற்றுத் தீருவது என்று முடிவெடுத்துவிட்டால் அந்த மக்கள் விடுதலை பெறுவதை உலகத்தில் எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது; உண்மை, நீதி, எல்லாம் அவர்கள் பக்கமிருப்பதால் அவர்கள் வெற்றி பெறுவது திண்ணம்,"

என்று, கோவா படுகொலைக் கண்டனத் தீர்மானத்தின்மீது, சட்டசபையில் பேசிய எதிர்க் கட்சித் தலைவர் பி. இராமமூர்த்தி குறிப்பிட்டிருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ்  ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 18—8—'55 வியாழன்

# அந்த அவநம்பிக்கை!

இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திரப் பிரசாத், 'வடக்கு — தெற்கு' என்ற பேதத்தை ஒழிக்க தனிப்பட்ட முறையில் முயற்சிக்கப் போவதாக சில நாள் முன் வெளிவந்த செய்தி பற்றி அப்போதே நாம் கருத்தறிவித்திருந்தோம்.

இப்போது—மூன்று நாட்களுக்கு முன், ஆந்திரத் தலைநகரான கர்நூலில், ஜனாதிபதி அவர்கள் 'வடக்கும்—தெற்கும்' பற்றிப் பேசியிருக்கிறார்.

"என்னதான் நடைபெற்றாலும்கூட, இந்தியா பிரிக்கப்படாமல் — துண்டாடப்படாமல் ஒன்றாகத்தான் இருக்கப் போகிறது,"

என்று குடியரசுத் தலைவர் இராசேந்திரர் வரையறுத்துக் கூறுகிறார்.

இந்தியா ஒன்றாகவேதான் இருக்கப் போகிறதா— அல்லது, திராவிடம் 'ஏக இந்திய' அமைப்பிலிருந்து பிரிந்து, தனித்து, சுதந்திரமுடன் விளங்கப்போகிறதா என்பதை, குறுகிய எதிர்காலம் சொல்லவிருக்கிறது; அது குறித்து நாம் அவ்வளவாக இப்போது கவலைப்படத் தேவையில்லை.

ஆனால், கடந்த காலத்தில், இன்று 'இந்தியா' என்ற பெயர் கொண்டுள்ள அரசியல் இப்போதிருப்பதைப் போல் தான் இருந்ததா ?

'இந்தியா' என்ற அரசியல் அங்கத்தில் இடம் பெற்றிருந்த ஆப்கானிஸ்தான், பர்மா, இலங்கை, பாகிஸ்தான் இவை எல்லாம் இப்போது 'இந்தியா'விற்குள் இல்லை; 'இந்தியா' பிரிக்கப்பட்டு துண்டாடப்பட்டிருக்கிறது—கடந்த காலத்தில் என்பதற்கு, அந்த நாடுகள் பூகோளப் படத்தில் தனித்தனியான எல்லைக் கோடுகளையும், அரசியல் வரலாற்றில் 'சுதந்திர நாடுகள்' என்ற மதிப்பையும் பெற்றுத் திகழும் உண்மையே போதுமான சான்றாகும்.

'பின் எப்படி, இப்போதிருக்கிற 'இந்தியா' மட்டும் பிரிக்கப்பட முடியாததாக— துண்டாடப்படக் கூடாததாக ஆகிவிட முடியும்?' என்ற கேள்விக்கு, மக்கள், விடை எதிர்பார்க்கின்றனர்.

'தென்னாட்டு மக்களுக்கு நம்பிக்கை உணர்வூட்டச் செய்வதற்காக, நான், தென்னாட்டில் ஆண்டொன்றுக்கு ஆறு வாரங்கள் அல்லது, இரண்டு மாத காலம் தங்குவதற்கு உத்தேசித்திருக்கிறேன்,"

என்றும் அவர் கர்நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

தென்னாட்டு மக்களுக்கு எந்த நம்பிக்கையை அவர் ஊட்டப்போகிறார் ?

'வடநாடு வேறல்ல—தென்னாடு வேறல்ல; இந்தியா முழுவதும் ஒன்றுதான்; எல்லோரும் இந்தியர்தான்,' என்ற நம்பிக்கையைத்தான் ஊட்டப் போவதாக அவர் கூறியிருக்க வேண்டும் என்று நம்புகிறோம்.

அப்படியானால், அவரது வாசகங்களின்படி, 'இந்தியா ஒன்று என்ற நம்பிக்கை, இப்போது, தென்னாட்டவரிடம் இல்லை,' என்பது புலனாகிறது.

'இந்த அவநம்பிக்கையை நீக்கி, நம்பிக்கை ஊட்டப் போகிறேன்,' என்கிறார், இராசேந்திரர்! செய்யட்டும்; அவர் முயற்சி, எத்தனை பலன் தரப் போகிறது என்பதை அவரே தெரிந்து கொள்ளும் வாய்ப்பு அவருக்குக் கிடைப்பதில் நமக்கு மகிழ்ச்சியே!

ஆனால், 'எல்லோரும் இந்தியர்தான்; இந்தியா ஒன்றுதான்,' என்ற நம்பிக்கை ஏன் தென்னாட்டவருக்கு இல்லாது போயிற்று என்பதை அவர் தெரிந்து கொண்டாக வேண்டுமே!

குடியரசுத் தலைவராயிருக்கிற இராசேந்திரர், "நான் தென்னாட்டில் வந்து குடியிருக்கிறேன்; உங்கள் நலன்களுக்கு குந்தகம் வராமல் பார்த்துக் கொள்கிறேன்," என்று கூறுகிற அளவு, 'வடநாடு—தென்னாடு' என்ற இரு பெரும் பகுதிகளிடையே வளர்ந்திருக்கின்ற வேறுபாடுகளையும் 'வடவரும்—தென்னவரும் ஒன்றல்ல,' என்ற எண்ணம், தென்னாட்டவரிடம் இல்லாமற்போனதற்கான அடிப்படை காரணங்களையும் அவர் தெரிந்துகொள்ள முயற்சித்தாக வேண்டும்.

'காஷ்மீர் முதல் கன்னியா குமரிவரை வாழும் கோடானு கோடி மக்களும் இந்தியர்கள் தான்,' என்ற நம்பிக்கை உண்மையில் சரித்திர பூர்வமாக நிலைத்திருந்திருக்குமானால், 'வடவர்கள் நம்மவர்களல்லர்; நாம் வேறு — அவர்கள் வேறு,' என்ற நம்பிக்கை, எப்படி தென்னாட்டவர் உள்ளத்தில் பிறந்திருக்க முடியும்? இராசேந்திரர் கூறுகிற அவநம்பிக்கை தென்னாட்டவர் உள்ளத்தில் ஏற்படுவானேன் ?

தென்னாட்டு மக்களையும், வடநாட்டு மக்களையும் பிரித்து வைக்கும் அம்சங்கள் என்ன ?

என்னதான் 'ஒற்றுமை கீதம்' இசைத்தாலும், 'ஏக இந்திய' பாடம் படித்தாலும், 'வடக்கு — தெற்கு' என்று பிரித்துப் பேச வேண்டிய அவசியம்—'அப்படிப் பேசுவதே நமது உயர்ந்த அரசியல் கௌரவத்திற்கு இழுக்கு' என்றெண்ணிக்கிடந்த வடநாட்டுத் தலைவர்கள் உட்பட—எல்லோரையும் நிர்ப்பந்தப்படுத்துகிறதே, ஏன்? — என்பன போன்ற கேள்விகளுக்கெல்லாம், விடை தெரிந்துகொள்ள முயற்சிக்காமல், 'ராஷ்டிரபதி நிலையம்' என்று — 'நிலையம்' என்ற தமிழ்ச் சொல்லை வைத்திருக்கிறேன் பார்த்தீர்களா?— ஆண்டு ஒன்றுக்கு ஆறு வாரம் இங்கே தங்கப் போகிறேன் தெரியுமா?—இரண்டு தேசிய நாட்களில் ஒரு நாளை இங்கு கொண்டாடப்போகிறேன், அறிவீரா?—என்றெல்லாம் கூறுவதின் மூலம், 'என்றுமே மனப்பூர்வமாக ஏற்பட்டிராத ஒற்றுமையை ஏற்படுத்தப் போகிறேன்,' என்று இராசேந்திரர் கூறுவது கேட்டு தென்னாட்டவர், 'எல்லோரும் இந்தியரே!' என்ற நம்பிக்கையைப் பெற்றுவிடமாட்டார்கள்; ஏனெனில், 'வடவரும்—தென்னவரும், ஒரே இன மக்களல்ல,' என்பது வரலாற்று உண்மையாகும்!

---

## 'சர்வரோக நிவாரணியல்ல'

### பண்டித பந்த் ஒப்பம்

பாடியாலா, ஆக. 15—

புதியதொரு போலீசார் குடியிருப்பைத் திறந்து வைத்து மத்திய உள்நாட்டிலாகா மந்திரி பண்டித பந்த் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில், காந்தியாரின் சீடரும், 60 வயது நிரம்பியவருமான பீபி அம்துஸ் சலாம் என்ற பெண்மணி, காந்தியாரின் இலட்சியங்களை ஈடேற்றுவதற்காக, போலீசாருக்கான புதிய வேலை முறைகள், மற்றும் பலாத்காரத்திற்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் போன்றவற்றிற்கான தனது யோசனைகள் கொண்ட திறந்த மடல் ஒன்றை தந்திருப்பதாக அறிவித்தார்.

குற்றவாளிகளை, காந்திய வழிகளில் திருத்துவதற்கு நூல் நூற்றல் போன்ற தொழில் நிலையங்களை ஏற்படுத்தவேண்டும் என்று அவர் யோசனை தெரிவித்திருந்தார்.

கிராம வழக்கொன்றில் போலீசார் செய்த சித்திரவதைகளைக் கண்டிக்கும் நோக்குடன் தான் 5 நாட்கள் உண்ணாவிரதமிருந்ததாகவும் அவர்குறிப்பிட்டிருக்கிறார்.

இதுபற்றி பண்டித பந்த் பேசுகையில், குறிப்பிட்டதாவது :—

"போலீசாரையும் குற்றவாளிகளையும் திருத்துவதற்கு நூல் நூற்கும் இயந்திரம் சர்வரோக சஞ்சீவி அல்ல."

"தேவையானதெல்லாம், இதயப் பரிசுத்தம்தான்; இலாகா தலைவர்கள் இலஞ்ச ஊழல் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்."

---

## ரூ. 9,000 கோடியாம்!

புதுடில்லி, ஆக. 16—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கென எல்லா மாநிலங்களும் தயாரித்துள்ள நகல் திட்டங்களின் மொத்த மதிப்பீடு ரூ. 9,000 கோடி ஆகிறது என்று திட்ட துணை அமைச்சர் எஸ் என். மிஸ்ரா தெரிவித்திருக்கிறார்.

---

# படித்து வேலையற்றிருப்பவர்களுக்கு கட்டிடத் தொழிலில் பயிற்சியாம்!

## உடலுழைப்பின் பெருமைக்கு எடுத்துக்காட்டு?

"தொழிற்சாலை உற்பத்தி முறையில் சிக்கனச் சீரமைப்புக்கு அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டுமென்று கூக்குரல் போடும் போது, கட்டிடம் கட்டும் தொழிலில் நவீன முறைகளைக் கையாளுவது பின்தங்கிவிட முடியாது; ஓரளவு, இந்தக் காலப் போக்கை அனுசரித்தும், ஏராள மானவர்கள் படித்து விட்டு வேலையில்லாமலிருப்பதற்குச் சிறிது பரிகாரமளிக்கவும், படித்த இளைஞர்களுக்குக் கட்டிடம் கட்டும் தொழிலில் பயிற்சி அளிப்பதற்கான ஒரு திட்டத்தை மத்திய மராமத்து இலாகாவினர் ஆரம்பித்திருக்கின்றனர்; இந்த இலட்சியம் புதுமையாக இருந்தாலுங்கூட, இது, உடலுழைப்பின் பெருமையைத் தொழில் நுட்ப அடிப்படையின் பேரில் உயர்த்துவதற்கானதோர் முயற்சியேயாகும்,"

என்று, 1954-ம் ஆகஸ்டு மாதம், புதுடில்லியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிலையத்தைப் பற்றிய குறிப்பில் கூறப்பட்டுள்ளது

---

## சூரிய வெப்ப ஆராய்ச்சி

### உலக விவாத அரங்கில் 1,000 விஞ்ஞானிகள் ஆராய்வர்

போனிக்ஸ், (அரிஸோனா) ஆக. 16—

சூரிய வெப்பத்தை ஆராய்ச்சி செய்வதற்கு இங்கு நவம்பர் 1-ந் தேதி முதல் 5-ந் தேதி வரையிலும் நடைபெறப் போகும் உலக விவாத அரங்கில், பல நாடுகளைச் சேர்ந்த 1,000 விஞ்ஞானிகளும் எஞ்சினியர்களும் கலந்து கொள்வர்.

சூரிய வெப்பத்தை எவ்வகையில் பயன்படுத்தலாமென்பதை விளக்கிக் காட்டும் கண்காட்சியை சுமார் 40,000 பேர் பார்க்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## பர்மியப் பிரதமருக்கு எகிப்து அழைப்பு

கெய்ரோ, ஆக. 16—

எகிப்து நாட்டிற்கு வருகை தருமாறு, பர்மியப் பிரதமர் யூ - நூ வுக்கு அப்டெல் நாசர் அழைப்பு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

பர்மா நிதி இலாகா மந்திரி கெய்ரோ வந்திருக்கிறார்! அவரிடம் அழைப்புத் தரப்பட்டிருக்கிறதாம்.

எகிப்து பிரதமர் நாசருக்கு, பழங்கால பர்மிய வெள்ளி உடைவாள் ஒன்றை, பர்மா நிதி இலாகா அமைச்சர் அன்பளிப்பாகத் தந்திருக்கிறார்.

---

## உங்களுக்குத் தெரியுமா?

கார்களும், டிரக்குகளுமாக மொத்தம் 14,462 வண்டிகள் 1954—ல் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன; அதற்கு முந்திய ஆண்டில்—1953 ல், இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட கார்கள், டிரக்குகள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை 13,926 ஆகும். இந்திய மோட்டார் வண்டி உற்பத்தித் தொழிலில் மொத்தம் ரூ. 14,35,00,000 மூலதனம் போடப்பட்டிருக்கிறது; இந்த மூலதனம் அனேகமாக முற்றிலுமே இந்தியாவினுடையது தான். இந்தத் தொழிலில் சுமார் 7,000 தொழிலாளர்கள் உள்ளனர். இவர்களில் சுமார் பாதிப் பேர் தொழில் நுட்பம் தெரிந்தவர்கள்.

---

## நெய்வேலி நிலக்கரி

### சுரங்க வேலைகள் நிலைநிற்கவில்லையாம்!

புதுடில்லி, ஆக. 16—

"நெய்வேலி நிலக்கரிச் சுரங்க வேலைகள் நிலைநின்றதே கிடையாது"

என்று மத்திய சர்க்கார் துணை உற்பத்தி அமைச்சர் மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலாகத் தெரிவித்திருக்கிறார்.

"நெய்வேலி நிலக்கரிச் சுரங்கப் பகுதிகளில் 'டிரில்லிங்', 'பம்பிங்' போன்ற வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றன" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சென்ற ஏப்ரல், மே திங்களில், ஜெர்மனி, அமெரிக்கா ஆகியவற்றிற்கு நான்கு பம்புகளுக்கு ரூ. 31,260; ரூ. 60,250 விலைக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளதென்றும், அந்த நான்கு 'டர்பைன் பம்புக'ளும், வருகிற செப்டம்பர் திங்களில் வரக்கூடுமென்றும், மேலும் 8 நேரான டர்பைன் பம்புகளுக்கான ஆர்டர்கள் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், இன்னும் அந்த ரகத்தைச் சேர்ந்த 8 பம்புகளுக்கு ஆர்டர்கள் கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும், அந்த 16 பம்புகளும் பெரும்பாலும் வருகிற அக்டோபர் இடைக்காலத்தில் கிடைக்கக் கூடுமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

நெய்வேலி சுரங்க வேலைகளில், 'உண்மையான வேலை'களில் 88-சத விகித வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும், தேங்கியிருக்கும் தண்ணீரின் மட்டத்தைக் குறைத்ததும் பாக்கியுள்ள தொழில்கள் அனைத்தும் முடிவு பெற்றுவிடுமென்றும் சென்ற கூட்டத்தின் போது, இதேபோன்ற கேள்வி ஒன்றுக்கு அளித்த அமைச்சரின் பதிலை எடுத்துக் கூறி, டாக்டர் ராமாராவ் என்ற உறுப்பினர், "வெறும் பம்புகளின் தேவையினாலேயே வேலை நிலை நின்று போய் விடாமல் பார்த்துக்கொள்ள திட்ட இலாகா என்னென்ன செய்தது?". என்று கேட்டபோது, அமைச்சர், "சென்னை சர்க்கார் தேவையான பம்புகளை வைத்திருக்கிறது; அந்தப் பம்புகளை வைத்துக்கொண்டு சென்னை மாநில சர்க்கார் வேலையைத் தொடர்ந்து நடத்தி வருகிறது; அவ்வேலைகளைச் செய்வதில் சென்னை சர்க்கார் பல தொல்லைகளைச் சமாளிக்க நேரிட்டது; அதுபோது, பெரிய அளவினதாக பம்புகள் தேவைப்பட்டன; அந்தப் பம்புகள் வந்து சேருவதையொட்டி, சர்க்காரும், சுரங்க வேலையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டுதான் வருகிறது" என்று பதில் கூறியிருக்கிறார்.

---

# சுதந்திரத்திற்குப் பின் தொழிலாளர் நலன் பெருகியுள்ளதாம்!

## சர்க்காரின் கேலிக்கூத்து

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, தொழில்துறைத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமையில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதாம்; தொழிலாளர்களின் கூலி விகிதங்கள் உயர்ந்திருப்பதுடன், இப்பொழுது அவர்கள் பல சௌகரியங்களையும் அனுபவித்து வருகின்றனராம்!

1947-ம் ஆண்டில், இந்தியாவில் தொழில்துறைத் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 22,74,689-ஆக இருந்ததாம்; அவர்கள், ஆண்டுதோறும் சராசரி ரூ. 737 சம்பாதித்து வந்தனராம்; 1953-ம் ஆண்டில் தொழிலாளர்களின் எண்ணிக்கை 24,03,174-ஆக உயர்ந்துவிட்டதாம்; அவர்களது சம்பாத்தியமும் ஆண்டிற்கு சராசரி ரூ 1,111 8-ஆக உயர்ந்துவிட்டதாம்; தொழிலாளர் பெற்றுவரும் கூலிகளின் உண்மைப் பெறுமானமும் 1947-ம் ஆண்டுக்குப் பிறகு ஏறுமுகமாகவே இருந்துவந்திருக்கிறதாம்!

வயது காலத்தில் உதவுவதற்காக பிராவிடண்ட் நிதி ஏற்பாடு, வேலையில்லாத காலத்துக்கும், ஆட்குறைக்கப்படும் போதும் நஷ்ட ஈட்டுக்கு ஏற்பாடு, மற்றும் இதுபோன்ற இதர பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவை, தொழிலாளர்கள் சாதாரணமாக எதிர்பார்க்கும் தேவைகள்—என, இப்பொழுது அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனவாம்!

இவ்வாறு, தொழிலாளர் நலன் பற்றி வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நூருண்டு முயற்சி மூன்ருண்டில் முடிவு!

உணவைப் பெருக்குவதில் அணு சக்தி செய்யும் அற்புதங்கள்

அணுசக்தி ஆராய்ச்சியால் விவசாயத்துக்குப் பயன் உண்டா?

அணுசக்தியைப் பயன்படுத்தி, இன்று, நமக்குத் தெரிந்த பயிர் வகைகளின் விளைவை, இன்னும் அதிகமாகப் பெருக்க முடியும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி போல மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

'அணுவிளுல் உழவின் விளைவு பெருகும்,' என்பதற்குக் காரணம் என்ன?

பயிர் வகைகளுக்கு எப்பொழுது இரசாயன உரங்கள் தேவைப்படுகின்றன—அவற்றை அப்பயிர்கள் எப்படி உட்கொள்ளுகின்றன—என்றெல்லாம், அணுசக்தி ஆராய்ச்சியால் கிடைத்த 'ஐசடோப்பு'களால் தெரியவந்திருப்பது ஒரு காரணம்.

பயிர் வகைகளில் செயற்கையாய் மாறுதல் ஏற்படுத்தி, மாறுதலுற்ற பயிர்களில் தகுதியானவற்றைப் பொறுக்கியெடுப்பது, விஞ்ஞானிகள் சிறந்த பயிர் வகைகளைக் காண்பதற்குக் கையாளும் முறையாகும். இவ்வாறு, நாம் விரும்பும் தகுதி உடைய பயிர் வகைகளைப் பெறுவதற்கு, சாதாரணமாக, நெடுங்கால ஆராய்ச்சி தேவைப்படும்; ஆனல், இப்பொழுது, பயிர்கள்மீது அணுக் கதிரியக்கத்தைப் பாய வைத்து அவற்றில் விரைவாக மாறுதல்களை உண்டு பண்ணலாம்; முன்பு 100 ஆண்டுகளாக வருந்தி, முயன்று செய்த மாறுதல்களை இரண்டு மூன்று ஆண்டுகளில் செய்து விடலாம்—என்று குறிப்பிடப்படுகிறது

இவ்வாறு அணுக்கதிர்கள் பாய்ந்து, உரு மாற்றமோ, இயல்பு மாற்றமோ பெற்ற பயிர் வகைகள் சில, நோய்க்கு இடங்கொடாத முறையில், தங்கள் பழைய பயிரினங்களைக் காட்டிலும் சிறந்தவையாக உள்ளன. மற்றும் பல, தங்கள் முன்னைய பயிரினங்களைப் பார்க்கிலும் அதிகம் விளையக் கூடியவையாயுள்ளன

இதுவரை விஞ்ஞானிகள் பரிசோதித்துப் பார்த்த அணுசக்தி முறைகளைச் சேர்த்துப் பயன்படுத்தி, நாம் இன்றைய விளைநிலங்களிலேயே இன்னும் பல மடங்கு விளைவிக்கலாமாம்!

அவ்வாறு செய்தால், மக்கள் நெருக்கம் மிக்க இடங்களில் அத்தியாவசியமாயுள்ள உணவுப் பெருக்கம் ஏற்பட வழியுண்டாகுமாம்!

அமைதியாக நடைபெற்று வரும்

# அணுசக்தி மாநாடு

வாழ்க்கைப் பிரச்சினையில் ஒரு புதிய நிலையைத் தோற்றுவிக்கும்

அணுசக்தி மாநாடு, ஜினீவாவில் ஆரவாரமின்றி, அமைதியாக நடைபெறுகிறது; எல்லாம் இனிது முடிந்தால், அணுசக்தி பற்றிய அரசியல் பிரச்சினைகளும் தீரும்.

இம்மாநாடு, முற்றும் விஞ்ஞான நிலையில் நடைபெறுவதாகும்; இது அரசியலுக்கு அப்பாற்பட்டது; இவ்வுண்மையை, அதன் பொருளும், நடைமுறை விதிகளும் காட்டும். அங்கு சகோதரர்களாகக் கூடியுள்ள விஞ்ஞானிகளுக்குள் காணப்படும் உணர்ச்சியும் அதனைத் தெளிவுபடுத்தும்.

அணுசக்தியினுல், நடைமுறையில் நலன்கள் விளையக்கூடியதாக தோன்றும் காலத்தில், இந்த மாநாடு கூடியிருக்கிறது; என்றுலும், உடனே பாலை சோலையாகி விடாது; ஆயினும் ஐந்து ஆண்டுகளில் அணுசக்தியால் மின்சாரம் தோற்றுவிக்கும் மின்சார நிலையங்கள் தோன்றிவிடும்.

மாநாட்டுக்காக எழுதப் பெற்றுள்ள ஓராயிரம் கட்டுரைகளைப் படித்தால், விவசாயத்துக்கு, அணுசக்தி ஆராய்ச்சியால் அதிகமான அநுகூலங்கள் ஏற்படுவதாகக் காணலாம்.

கப்பல்களையும், விமானங்களையும்

# இந்தியாவில் சிமெண்ட் உற்பத்தி!

'கட்டுப்பாடு' நீங்காது?

புதுடில்லி, ஆக 16—

இந்தியா, வெகு விரைவிலேயே 50 இலட்சம் டன் சிமெண்டை உற்பத்தி செய்யும் என்றும், அடுத்த மார்ச்சு திங்களுக்குள்ளாக 60 இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்யப்படலாமென்றும், நாட்டில் சிமெண்ட் பற்றாக்குறை இருக்கும் வரையிலும் 'கண்டிரோல்' இருக்கத்தான் வேண்டும் என்றும் தொழில் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கூறியிருக்கிறர்.

மேலும், ஆண்டுதோறும் 100 இலட்சம் டன் சிமெண்ட் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் அறிவித்திருக்கிறர்.

# சந்தேகத்திற்கு 10 பேர் பலி!

இலக்குமணபுரி, ஆக. 16—

மனைவியின்மேல் சந்தேகம் கொண்ட ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர், தம்முடைய மனைவியை துப்பாக்கியால் சுட்டு படுகாயப்படுத்தி, 8 குழந்தைகளையும் சுட்டுக் கொன்றுவிட்டு, இறுதியில் தம்மைத் தாமே தற்கொலையும் செய்து கொண்ட சம்பவம் ஒன்று ஹர்தோய் மாவட்டத்தில் உள்ள ஒரு இடத்தில் நடைபெற்றிருக்கிறதாகத் தெரிய வருகிறது.

தம்முடைய மனைவியார் தவருன நடத்தைகளில் ஈடுபட்டிருப்பதாகச் சந்தேகங் கொண்ட அந்த சப்-இன்ஸ்பெக்டர், தம்முடைய குழந்தைகளின் முன்னிலையிலேயே மனைவியை சித்திரவதை செய்ததாகவும், தாயாருக்காகப் பரிந்து பேசவந்த மூத்த மகளை உடனே அவர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாகவும், பின்னர் ஒவ்வொருவராக மற்ற ஏழு பிள்ளைகளையும் சுட்டுக் கொலை செய்ததாகவும், பின்னர் தானும் தற்கொலை செய்து கொண்டதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகி அரைகுறை உயிருடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் அவரது மனைவியார் மிக ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தெரிகிறது.

## உதவி கேட்கவில்லையாம்!

சோவியத் ரஷ்யாவிற்குத் தாம் சென்றிருந்தபோது, குறிப்பிட்ட எந்தவிதமான தொழில் நுட்ப அல்லது பொருளாதார உதவியையும் அளிக்க வேண்டுமென்று இந்தியா, ரஷ்யாவைக் கேட்டுக் கொள்ளவில்லை என்றும், அது போலவேதான் உதவி எதுவும் தருவதாகக் ரஷியா கூறவுமில்லை என்று, பிரதமர் நேரு மக்கள் சபையில் கூறியிருக்கிறர்.

சோவியத் பிரதமர் புல்கானினும், தாமும் வெளியிட்டிருந்த கூட்டறிக்கையில், பொருளாதார, கலாச்சார, தொழில் நுட்ப, விஞ்ஞான துறைகளில் இரு நாடுகளும், தங்களிடையேயுள்ள உறவுகளை வளர்த்து, வலுப்படுத்த ஒப்புதல் தந்துள்ளன என்றும் தெரிவித்திருக்கிறர்.

அணுசக்தியால் ஒட்டக்கூடும்: இயற்கை விஞ்ஞானத்துறையில் முன்னேற்றங்கள் ஏற்படும்; இந்தப் பூமியிலுள்ள வாழ்க்கை, ஒரு புதிய நிலையை அடையும் என்பதைக் காணலாம்; இன்று, இவையெல்லாம், ஒரு விஞ்ஞானக் கதை போல் தோன்றலாம்; இன்று எந்த மொழி பேசுவோரும் இதனைத் தங்களுக்கே உரிய புதிய அணு மொழியில் சொல்வதால் அதனைப்பற்றி அறிய முடியாமல் இருக்கலாம்.

அணுசக்தியைத் தொழிலுக்கு அதிகமாகப் பயன்படுத்தும்போது வாணிபத் துறையில் போட்டி ஏற்படத்தான் செய்யும்.

# 20 ஆண்டு கடுங்காவல்

சிரியாவின் முன்னுள் ஜனுதிபதிக்கு தண்டனை

டமாஸ்கஸ், ஆக. 15—

இராணுவ 'சார்ஜண்ட்' ஒருவரை சித்திரவதை செய்து கொன்றுவிட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட சிரியாவின் முன்னுள் ஜனுதிபதியான அடீப் ஷிஷாக்லி என்பவருக்கு, 20 ஆண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை தந்து இராணுவ நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

அவருடைய பதவி காலத்தில் இராணுவத் தலைவராயிருந்த காப்டன் அப்துல்லா ஷிகாடி என்பவருக்கும் அதே குற்றத்திற்காக அதே தண்டனையை அந்த நீதி மன்றம் தந்திருக்கிறது.

தண்டிக்கப்பட்டுள்ள இருவரும் இப்போது பாரிஸ் நகரில் இருக்கின்றனர்.

கடந்த 1951-ல், ஜனுதிபதியாயிருந்த ஹாஷெம் அதாஸியூ என்பவரை ஷிஷாக்லி துரத்திவிட்டு, பதவியைக் கைப்பற்றினர்; ஆனல், மீண்டும் 1954 பிப்ரவரியில் 79 வயதான அதாஸியூ நாட்டில் ஏற்பட்ட இராணுவப் புரட்சி மூலம், ஜனுதிபதியானுர்; ஷிஷாக்லி சிறைப்பட்டார்.

# தொழில்தகராறுசட்டம்

குறைபாடுகள் திருத்தப்படும்

"நிவாரணத்திற்குத் தகுதி வாய்ந்த தொழிலாளர்கள் அனைவருக்கும் நிவாரணம் கிடைக்கும் வகையில் தொழில் தகராறு சட்டத்தில் காணப்படும் சில குறைபாடுகளைப் போக்க சர்க்கார் சட்டம் ஒன்று இயற்றும்; அத்துடன் பீடித் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பது பற்றியும் விரைவிலேயே சர்க்கார் ஒரு முடிவு மேற்கொள்ளும்," என்று சென்னை சர்க்கார் காரியாலயத்தில் நடைபெற்ற பீடித் தொழிலாளர்கள் — முதலாளிகள் ஆகியோரது பிரதிநிதிகள் அடங்கிய மாநாடு ஒன்றில், தலைமை தாங்கிய அமைச்சர் பக்தவத்சலம் கூறியிருக்கிறர்.

சென்னை மாநிலத்திலுள்ள பீடித் தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து மாநாட்டில் கூறப்பட்ட கருத்துக்களைக் கவனித்து சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்திருக்கிறர்.

இந்திய சர்க்கார், தொழில் தகராறு சட்டத்திற்குச் செய்யப் போகும் திருத்தம் எப்போது கொண்டுவரப்படும் என்று தெரியாததால், மாநில சர்க்கார் அதுவரை காத்திராமல், திருத்த மசோதா ஒன்றினைக் கொண்டுவர இருப்பதாகவும் கூறியிருக்கிறர்.

# சுதந்திரம் திசை மாறுகிறதாம்!

நாடு கடத்தப்பட்ட பிரிட்டிஷ் ஆசிரியர் கருத்து

நியூயார்க்கிலிருந்து வெளிவரும் 'நாஷனல் கார்டியன்' என்ற வார இதழின் பிரிட்டிஷ் ஆசிரியரான செட்ரிக் பெல்பிரேட் என்பவர், அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்குப் புறப்பட்டார்.

அவர் 1930-ல், கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினராயிருந்தார் என்பதற்காக, மூன்று மாதம் சிறையில் வைக்கப்பட்டிருந்த பின், இப்போது நாடுகடத்தப்பட்டிருக்கிறர்

"ஒரு காலத்தில் மேற்கு நோக்கிச் சென்ருல், எண்ணவும், இயங்கவும் அதிகமான சுதந்திரம் கிடைக்குமென கருதப்பட்டது போய், இப்போது, கிழக்கு நோக்கிச்செல்வதில்தான் அதிக சுதந்திரம் கிடைக்கும் என்று கருதவேண்டியிருக்கிறது," என்று, கப்பலேறியதும், தான் தயாரித்து வைத்திருந்த அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்திருக்கிறர்.

# இந்தோனேஷிய குழப்பம்

இராணுவத்தினர் — மந்திரி சபை சமரசம்

ஜகார்தா, ஆக. 16—

இந்தோனேஷிய சர்க்காருக்கும்—இராணுவத்திற்கும் இடையே நீண்ட நாளாக இருந்துவந்த தகராறினைத் தீர்ப்பதற்காக புதிய பிரதமர் ஹாராஹப் சமாதான திட்டம் ஒன்றை வெளியிட்டிருக்கிறர் என்று தெரிகிறது.

கடந்த 1950 அக்டோபர் 17-ந் தேதியன்று, மக்களாட்சிக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்ட அனைவருக்கும் மன்னிப்பு வழங்க மந்திரி சபை ஒப்புக்கொண்டிருக்கிறது.

மேலும், இராணுவத் தலைவராக இருக்கும் பாம்பாங் உடோயாவின் விலகுதலை ஏற்றுக்கொள்வதென்றும் முடிவாகியிருக்கிறதாம்.

இவரை இராணுவத் தலைவராக நியமிப்பதற்குத்தான் இராணுவத்தினரிடையே பலத்த எதிர்ப்பு இருந்தது.

இந்த இரண்டு முடிவுகளும், இராணுவத்தினருக்குத் தரப்படும் சலுகைகளாகும்.

புதிய இராணுவத் தலைவர் நியமனம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

மேஜர்-ஜெனரல் உடோயோ தளபதியாக நியமிக்கப்படுவதற்கு எழுந்த எதிர்ப்புச் சக்திக்குத் தலைமை தாங்கிய லூயிஸ் என்ற உதவி இராணுவத் தலைவரிடம் இடைக்காலத்தில் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது.

# என்ன துணிவு?

சென்னை, ஆக 16—

தான் ஒரு கம்யூனிஸ்டு எம். எல். ஏ.—என்று கூறிக்கொண்டு, தனக்குத் தரவேண்டிய ஊதியத்தைத் தரும்படி சென்னை சட்ட சபைக் காரியாலயத்தினரை அணுகிய ஒரு நபர், தற்போது போலீஸ் பாதுகாவலில் வைக்கப்பட்டிருக்கிறர்.

மேற்படி நபர், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த மன்னர் குடியைச் சேர்ந்த 31 வயதுடையவர் என்றும், அவர் பெயர் பி கோதண்டபாணி என்றும் தெரிகிறது.

அவர், தம்மை ஒரு கம்யூனிஸ்டு எம். எல். ஏ., என்றும், தனக்குத் தரப்படவேண்டிய ஊதியத்தைப் பெறுவதற்குத் தேவையான அடையாளக் கடிதம் தரும்படியும் சென்னையிலுள்ள கம்யூனிஸ்டு கட்சி காரியாலயத்தில் கேட்டுக் கொண்டதாகவும், ஆனல், அந்நபர் மீது சந்தேகங்கொண்ட கம்யூனிஸ்டு கட்சி காரியாலயத்தினர், முத்திரை பொறிக்கப்பட்ட காகிதத்தில், அந்நபர் மீதுள்ள தங்கள் சந்தேகத்தை எடுத்துக்காட்டி, அதனை உறையிலிட்டு அவரிடம் கொடுத்ததாகவும், அதனைகொண்டு வந்த மேற்படி நபர், சட்ட சபைக் காரியாலயத்தினரிடம் கொடுக்க, கடிதத்தைப் பிரித்துப்படித்த அதிகாரிகள் உடனே அவரைப் போலீசாரிடம் ஒப்படைத்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது.

மேற்படி நபர் மீது வழக்கொன்று பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், மேலும் போலீஸ் புலன் விசாரணை நடைபெற்று வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

# ஐ. நா. குழந்தைகள் நிதியின் உதவி

1955-ம் ஆண்டின் முதல் ஆறு மாதத்தில், ஐ. நா. குழந்தைகள் நிதியினின்று 1,60,00,000 குழந்தைகளும், தாய்மாரும் உதவி பெற்றிருக்கிறர்கள்; க்ஷயரோகத் தடுப்பு முயற்சிகளும், மலேரியா ஒழிப்புத் திட்டங்களும் நடைபெற்றுள்ளன; அவசரத்துக்கு வேண்டிய உணவும் அனுப்பப்பட்டிருக்கிறது.

# நில உடைமைக்கு வரம்பு

மத்தியமந்திரியுடன்சென்னை மந்திரிகள் பேச்சு

சென்னை சர்க்கார், நில உடைமைக்கு வரம்பு கட்டினதின்மூலம் எழுந்துள்ள சட்டக் குறைபாடுகள் பற்றி மத்திய சர்க்கார் பரிசீலனை செய்யுமென்று தெரிகிறது.

மத்திய அமைச்சர் குல்ஜாரிலால் நந்தா, சென்னை அமைச்சர்கள் காமராசர், சுப்பிரமணியம், பக்தவத்சலம் ஆகியோரிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை யின்போது இப்பிரச்சினையும் தேர்ந்து கொள்ளப்பட்டிருக்கிறது.

அண்மையில் நிறைவேற்றப்பட்ட மசோதா, ரயத்துவாரி நில உடைமைக்குப் போதுமான பாதுகாப்புத் தந்து, மாநில சர்க்காரால் நிர்ணயிக்கப்படும் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு, அதிகப்பட்ட நிலங்களை குடியானவர்களுக்கு வழங்கச் செய்வதில் பயன் தருமா என்று சென்னை அமைச்சர்கள் வினவியதாகத் தெரிகிறது.

நேரடியாகவே, நிலம் அல்லது வேறெந்த வகைச் சொத்துக்களையும், சட்டசபைகளின் முடிவுப்படி விலைக்கு வாங்கிக்கொள்ள அச்சட்டம் வழி செய்கிறதாம்; ஆனல், சென்னை சர்க்கார் மிக அதிகமான அளவிற்கு நேரடியாக நிலங்களை விலைக்கு வாங்கி, அதனை மறுபடியும் குடியானவர்களுக்கு வழங்குவதை இலகுவான ஒன்ருகக் கருதவில்லை என்றும், எனவே, நில உடைமைக்கு ஒரு வரம்பு கட்டி குடியானவர்களுக்கு நிலங்களை வழங்குவதில் ஒரு கட்டுப்பாடு நிலவச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறதாம்.

## அடுத்த பொதுத் தேர்தல்

தேதி நிர்ணயமாகவில்லையாம்!

புதுடில்லி, ஆக. 16—

அடுத்த பொதுத் தேர்தலுக்கான காலத்தை நிர்ணயிப்பது குறித்து இன்னும் சர்க்கார் பரிசீலனை செய்யவில்லை என்றும், இது, தேர்தல் குழு நிர்ணயிக்க வேண்டிய ஒரு காரியம் அல்ல என்றும் டில்லி மேல்சபையில் சட்ட அமைச்சர் பிஸ்வாஸ் தெரிவித்திருக்கிறர்.

மேலும், மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கையும் இன்னும் வந்து சேரவில்லை என்றும் கூறியிருக்கிறர்.

• • •

மாநில சட்ட சபைகளுக்கும் பாராளுமன்றத்திற்கும் ஒரே காலத்தில் தேர்தல் நடைபெற வேண்டுமென்று தேர்தல் அதிகாரிகள் மாநாடு சிபாரிசு செய்திருப்பதாக அதே அமைச்சர் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறர்.

# கூடிக்கூடிப் பேசுகிறர்கள்!

சென்னை, ஆக. 16—

அரிசி வினியோக நிலைமை, கொள்முதல் ஆகியவற்றைப் பரிசீலனை செய்யவும், விலைகளின் வரம்பை நிர்ணயிக்கவுமான பிரச்சினைகளைப் பரிசீலனை செய்யவும், அரிசி உற்பத்தி செய்யும் மாநில சர்க்கார்களின் செயலாளர்கள், இத்திங்கள் 24, 25 ஆகிய இரு நாட்களிலும் டில்லியில் கூடுவர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மாநாட்டில், பிரதேச உணவு டைரக்டர்களும் கலந்து கொள்வராம்.

## 'பயங்கரப் புத்தகங்கள்'

தடை செய்ய மசோதா

ஏற்கனவே வெளியிட்டும், தற்போதும் பிரசுரிக்கப்பட்டும் வருகின்ற குத்து, கொலை போன்ற பயங்கரக் கொலைகள் சம்பந்தமான புத்தகங்களின் விற்பனையையும் வெளியீட்டையும் தடை செய்வதற்கென சர்க்கார் விரைவிலேயே ஒரு மசோதா கொண்டுவர இருப்பதாக, டில்லி மேல்சபையில், துணை உள்நாட்டிலாகா அமைச்சர் தத்தர் கூறியிருக்கிறர்.

# தலைமை ஆசிரியருக்கு இரண்டரை ஆண்டு கடுங்காவல்!

## 8 வயது சிறுமியை அடித்ததின் எதிரொலி!

ஜபல்பூர், ஆக. 17—
இங்குள்ள ஆரம்பப் பள்ளி ஒன்றின் தலைமை ஆசிரியர் ஒருவருக்கு, இரண்டரை ஆண்டு கடுங்காவல் தண்டனை தரப்பட்டிருக்கிறது.

எட்டு வயது மாணவச் சிறுமியை, பள்ளிக்கு சரிவர வருவதில்லை என்ற காரணத்திற்காக, கடந்த ஜனவரி 3-ந் தேதியன்று இந்த தலைமை ஆசிரியர் அடித்தாராம்; வீடு சென்றதும் சிறுமி இறந்துவிட்டாளாம்.

"குழந்தை அடிக்கப்பட்டதினால்தான் இறந்தது என்பது நிரூபிக்கப்படாவிட்டாலும், அடிபட்டதின் விளைவாக குழந்தையின் சாவு நேர்ந்திருப்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது," என்று தீர்ப்பு வழங்கிய நீதிபதி குறிப்பிட்டிருக்கிறார்.

## ம. சோ. கட்சியில் மேலும் பிளவு

### மத்திய பாரத் கிளை துண்டித்துக் கொள்ளுகிறது

இந்தூர், ஆக. 17—
மத்திய பாரத் ம. சோ. கட்சியின் நிர்வாகக் குழு, 'தேசிய நிர்வாகக் குழுவிலிருந்து பிரிந்துவிடுவது' என்று தீர்மானித்திருப்பதுடன், சுதந்திரமாக இயங்கும் தனிக் கட்சியாக தன்னைப் பிரகடனப்படுத்தியிருக்கிறது.

மேலும், டாக்டர் லோகியாவின் தலைமையில் தங்களுக்கு நம்பிக்கை இருப்பதாகவும், இப்போதுள்ள தலைமையின் பிற்போக்குத்தன்மை, குழப்பும் போக்கு இவற்றை எடுத்துரைத்துக் கண்டித்து, தேசிய மாநாட்டில் தங்கள் கொள்கையை விளக்க உரிமை பெற்றிருப்பதாகவும் நிர்வாகக் குழு முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

## ராணி விக்டோரியா சிலையின் மணிமுடி

### கல்கத்தாவில் திருட்டு

கல்கத்தா, ஆக. 17—
விக்டோரியா நினைவு மண்டபத்தில் உள்ள விக்டோரியா இராணியின் சிலையில் இருந்த விலை உயர்ந்த வெண்கல மணிமுடியை, யாரோ திருடிச் சென்றுவிட்டனராம்!

சிலையில் இருந்த இதர ஆபரணங்களும் திருட்டுப் போய்விட்டனவாம்.

திருட்டுப் போன மொத்த சாமான்களின் எடை ஒரு மணங்கு இருக்கலாம் என மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

இதனை ஒட்டி போலீசார் நான்கு பேர்களைக் கைது செய்திருக்கின்றனராம்.

## பிரதமர் நேரு தென்னாட்டு வருகை

சென்னை, ஆக. 17—
இந்தியப் பிரதமர் நேரு, அக்டோபர் திங்கள் 3-ந் தேதி முதல் 2 நாட்கள் தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் செய்ய இருக்கிறாராம்.

சேலம், திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், காரைக்கால், கடலூர், புதுச்சேரி, வேலூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களுக்கு அவர் வருகை தருவார் எனக் கூறப்பட்டிருக்கிறது.

அக்டோபர் 2-ந் தேதி அவர் சென்னைக்கு வருவார் என்றும், அன்று இரவே சேலம் சென்று, அங்கிருந்து சுற்றுப் பயணத்தைத் துவங்கி, 4-ந் தேதி மீண்டும் சென்னை திரும்புவார் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

## வீரர்கள் சடலம்....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மன் ஆகியோரது சடலங்கள் பெல்காமில் பூரண மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டனவாம்.

* * *

டாமனிலும், போர்ச்சுகீசிய அதிகாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட இராமகிரி சாதுவின் சடலம், அந்த போர்ச்சுகீசியப் பகுதியிலேயே செவ்வாயன்று தகனம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேற்படி சாதுவின் உடல் தகனம் செய்யப்படுகையில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கூடி நின்றனராம்.

கூடி நின்ற அம்மக்களைப் பயமுறுத்துவதற்காகப் போர்ச்சுகீசியப் போலீசார் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனராம்.

* * *

ஆகஸ்டு 15-ந் தேதியன்று கோவா வடக்கு எல்லையில் அரோண்டாவிற்கு அருகே பாலியா எனுமிடத்தில் இந்திய தேசியக் கொடியை ஏற்றிய யாதவ் என்ற இந்திய சத்தியாக்கிரகி ஒருவரைப் போர்ச்சுகீசியப் போலீசார் சுட்டுக் கொன்றுவிட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

## பம்பாய் சட்டசபை ஒத்திவைப்பு

பம்பாய் மாநில (மேல்) சட்டசபை தனது முதல் நாள் கூட்டத்தை ஒத்திவைத்திருக்கிறது.

## சுதந்திரம் கோருவோரை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போலீசார் 'டம்டம்' தோட்டாக்களைப் பிரயோகித்திருக்கின்றனர்.

'டம்டம்' தோட்டாக்கள் மிகுந்த பயங்கரமான வெடிகுண்டுகளாகும்; இவை பிரயோகிக்கப்பட்டு மனிதனின் உடலுக்குள் பாய்ந்த பின்னரே வெடிக்க ஆரம்பிக்கும்!

கோவா விடுதலை சத்தியாக்கிரகிகள் மீது 'டம்டம்' துப்பாக்கிக் குண்டுகள் பிரயோகிக்கப்பட்டதென்ற இத்தகவலை டாக்டர் லங்காசுந்தரம் தெரிவித்திருக்கிறார்.

## மக்கள் சபையில்

### 'கோரம்' இல்லா 'அகோரம்'

புதுடில்லி, ஆக 16—
மக்கள் சபை, கோவா வீரர்களுக்கு மரியாதை தெரிவிப்பதற்காக ஒத்திவைக்கப்பட்டு, பின்னர் கூடியபோது, முன் கூட்டியே மணி அடிக்கப்பட்டிருந்தும் 'கோரம்' இல்லாதிருந்தது.

சபையின் உதவித் தலைவர் எம். அனந்தசயனம் அய்யங்கார், 'சபையில் கோரம் இல்லாதிருப்பது கண்டிக்கத்தக்கது; 'கோரம்' நிலவச் செய்யவேண்டியது உறுப்பினர்களின் பொறுப்பாகும்; சபையில் மந்திரிகள் இல்லையென்றால் உறுப்பினர்கள் உரக்கக் கூவுகின்றனர்; அதே மாதிரி, சபையில் 'கோரம்' இருக்கச் செய்ய தங்களின் பொறுப்பையும் உணரவேண்டும்; நான் அடிக்கடி மணி அடிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## பேச்சு வார்த்தைகள் முறிந்துவிடும்?

ஜினீவா, ஆக. 17—
சிவிலியன்களைத் தங்கள் தங்கள் தாயகத்திற்கு அனுப்பிவிடுவது சம்பந்தமாக தற்போது ஜினீவாவில், அமெரிக்கத் தூதுவர்—சீனத் தூதுவர் ஆகியோரிடையே நடைபெற்றுவரும் பேச்சு வார்த்தையில் பூரணமான முட்டுக்கட்டை ஏற்பட்டு, பேச்சு வார்த்தைகள் முறிந்துவிடக்கூடிய அபாயம் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

## நெல்லை மாவட்டத்தில் அண்ணாதுரை

### சுற்றுப்பயணம்

★

19 மாலை 6 மணி: விக்கிரமசிங்கபுரம்; இரவு 8½ மணி: வீரவநல்லூர்.

20 காலை 10 மணி: அம்மன்புரம்; மாலை 6 மணி: ஆத்தூர்; இரவு 8½ மணி: சிவத்தயாபுரம்.

21 காலை 10 மணி: பாளையங்கோட்டை; மாலை 6 மணி: தூத்துக்குடி.

## மதுரை மாவட்டத்தில் அண்ணாதுரை

### சுற்றுப்பயணம்

22—8—55: மாலை 4 மணிக்கு: மதுரை அமெரிக்கன் கல்லூரி; இரவு 10 மணிக்கு: மதுரை: 'மணி மகுடம்' நாடகத் தலைமை.

23—8—55: மாலை 4 மணிக்கு: தேவதானப்பட்டி; மாலை 5 மணிக்கு: பெரியகுளம்; மாலை 7 மணிக்கு: ஆண்டிபட்டி இரவு 10 மணிக்கு: 'மணி மகுடம்' நாடகத் தலைமை.

24—8—55: மாலை 4 மணிக்கு: கம்பம் பொதுக்கூட்டம்; மாலை 6 மணிக்கு: போடிநாயக்கனூர்.

25—8—55: மாலை 4 மணிக்கு: மதுரை, தியாகராசர் கல்லூரி; மாலை 7 மணிக்கு: சோழவந்தான் பொதுக்கூட்டம்.

## கழகக் கூட்டம்

★

கலவை
சாயிபாபா ரைஸ் மில் மைதானத்தில்
19—8—55 மாலை 6 மணிக்கு
தலைவர்:
ஏ. எல். சி. கிருட்டிணசாமி
பேசுபவர்:
சி. பி. சிற்றரசு

## சேலம் மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்கட்கு

"21-8-55 மாலை 2 மணிக்கு, சேலம் சென்ட்ரல் பாங்கி ஓய்வு விடுதியில், சேலம் மாவட்ட தி.மு. கழக பொதுக் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுபோது, மாநில மாநாட்டு நிதி பற்றி பேசப்படும்,"

என்று, சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அறிவிக்கிறார்.

## என். வி. நடராசன்

### சுற்றுப்பயணம்

ஆக. 21 குடந்தை
22 வலங்கைமான்
24 சென்னை (வேப்பேரி)
28 திருப்பத்தூர் (வ ஆ.)
30 பெத்துநாய்க்கன் பேட்டை

## 'தூக்கு மேடை'—நாடகம்

20—8—55 இரவு 10 மணிக்கு, லா தா. வெங்கடாஜலபுரம் (உவனூர்) வ. உ சி திடலில், வள்ளுவர் நாடக மன்றத்தாரால், தோழர் அம்பில்-தர்மலிங்கம் தலைமையிலும், தோழர் எம் எஸ். மணி முன்னிலையிலும் 'தூக்கு மேடை'—நாடகம் நடைபெறும்.

## பொருளாதார முற்றுகை ஏற்படும்?

### கோவா மீது 'சமாதான எதிர் நடவடிக்கை?'

'சமாதான முறையிலேயே கோவாவை விடுவிக்க வேண்டும்' என்ற கொள்கைக்கு உடன்பட்டு இந்திய சர்க்கார் விரைவிலேயே மேலும் சில நடவடிக்கைகளை கோவா மீது மேற்கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்கிறது இது பற்றிய அறிவிப்பும் கூடிய சீக்கிரமே வெளியிடப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

போர்ச்சுகீசிய சர்க்காருக்கு எதிராக, இந்திய சர்க்கார் மேற்கொள்ளவிருக்கும் அந்த 'சமாதான எதிர் நடவடிக்கை'கள், பொதுவாக போர்ச்சுகீசியப் பகுதிகளுக்கும்—இந்தியப் பகுதிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் வர்த்தகம் சம்பந்தமாக இருக்குமென்றும், இதுபற்றி உயர்ந்த சர்க்கார் வட்டாரங்களுள் விவாதிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது

"போர்ச்சுகீசியப் போலீசாரின் மிருக வெறித்தனமான படுகொலைகளால், நாடு முழுமையிலும் ஏற்பட்டுள்ள கொதிப்பை ஓரளவு தணிக்க போர்ச்சுகீசிய அதிகாரிகள் மீது பொருளாதார முற்றுகை போன்ற நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்தாலும்கூட, அவை மிகக் குறைவான - இலகுவான நடவடிக்கைகளேயாகும்"

என்று அரசியல் பார்வையாளர்களும் தெரிவித்திருக்கின்றனராம்.

"போர்ச்சுகீசியத் தூதுவராலயத்தை மூடுவதுடன் மட்டுமன்றி, இந்தியாவின் சமாதானக் கொள்கைக்கு உட்பட்டவகையில் மற்ற நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொள்ளலாம்"

என்று மக்கள் சபையில் கோவா விவாதத்தின்போது பிரதமர் நேரு குறிப்பிட்டது ஈண்டு கருதத்தக்கது.

★

## கல்கத்தா செயலற்றுவிட்டது

கல்கத்தா, ஆக 17—
கோவா துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் கல்கத்தா நகர் முழுமையிலும் பூரண ஹர்த்தால் நடைபெற்றிருக்கிறது.

சாலைகளில் ஓடிக்கொண்டிருந்த டிராம் கார்கள், மோட்டார் பஸ்கள், ரிக்ஷாக்கள் போன்ற எல்லா போக்குவரத்து வண்டிகளும் நின்றுவிட்டனவாம். நகரில் திரைப்படக் கொட்டகைகள் கூட மூடப்பட்டனவாம். மேற்கு வங்க மாநில சட்டசபையும் கூட்டத்தை ஒத்திவைத்தது.

'டெலிபோன் எக்சேஞ்சு'களில் வேலைகள் எதுவும் சரிவர நடைபெற இயலாமல் போய்விட்டதாம்

நகரிலே மிகுந்த அலுவல்கள் நடைபெறும் 'டல்ஹௌசி சதுக்கம்' என்ற இடம் வெறும் பாலைவனமாகக் காட்சி தந்ததாம்!

உள்நாட்டு இரயில்கள் உட்பட எல்லா இரயில் போக்குவரத்துக்களும் நிலைநின்றுவிட்டனவாம்.

இன்று மாலை கல்கத்தா மைதானத்தில், கோவா போர்ச்சுகீசிய போலீசாரின் மிருக வெறிப் போக்கையும், இந்திய சர்க்காரின் 'உணர்ச்சியற்ற' போக்கையும் கண்டித்து ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

டம்டம் விமான நிலையத்திலிருந்து இரங்கூன், அகர்தலா, பெங்களூர் ஆகிய மூன்று இடங்களுக்கு மட்டுமே 3 விமானங்கள் விடப்பட்டன என்றும், தினசரி நடைபெறும் மற்றெல்லா விமான சர்வீசுகளும் நிறுத்தி வைக்கப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது

## மே. வ. சட்டசபை ஒத்திவைப்பு

மேற்கு வங்க மாநில சட்டசபை

## கோவா படுகொலை எதிரொலி

### பம்பாய் ஆர்ப்பாட்டங்களில் பலருக்குக் காயம்

பம்பாய், ஆக. 17—
கடந்த 16-ந் தேதியன்று, பம்பாயில், கோவாவில் உயிர் நீத்தத் தியாகிகளுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளின்போது சுமார் 170 பேர் காயமடைந்துள்ளனர் என்று அதிகார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

27 பேர் துப்பாக்கிக் குண்டுகளால் காயமடைந்தனர் என்றும், சுமார் 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

யின் நடவடிக்கைகளும் அரைமணி நேரத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டதாம்.

## மைசூரில்...

மைசூரில் உள்ள மிகப் பெரிய வீதியான அசோகா சாலை, மற்றும் அலுவல்கள் மிக்க மற்ற நகர் பகுதிகளிலும் எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டு பூரண ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டது.

## மதுரையில்...

மதுரை நகர் முழுமையும் கடைகள், மண்டிகள் அனைத்தும் மூடப்பட்டு, 'மதுரையின் வர்த்தக வாழ்க்கையே கெட்டுவிட்டதோ' என்று ஐயுறும் அளவிற்குப் பூரண ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டதாம்.

மதுரை கல்லூரியிலிருந்து சுமார் 2,000-த்திற்கும் அதிகமான மாணவர்களடங்கிய மிகப் பெரிய ஊர்வலம் ஒன்று ஆரம்பித்து வழிநெடுக போர்ச்சுகீசிய வெறிச் செயல்களைக் கண்டித்து ஒலி முழக்கம் செய்துகொண்டு சென்றனராம்.

## மலபாரில்...

தெல்லிச்சேரி ஜவகர்காட்டில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கண்ணனூரிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பூரண கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டது. எதிர்ப்பு ஒலிகளை முழக்கிக் கொண்டு நீண்ட ஊர்வலமும், ஊர்வலத்தின் பின்னர் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது

மாகியிலும் முழு ஹர்த்தால் நடைபெற்றிருக்கிறது.

பல பள்ளிகளையும் சேர்ந்த சுமார் 1,000-த்திற்கும் அதிகமான மாணவர்கள், ஆரவாரமற்ற ஊர்வலம் நடத்தியிருக்கின்றனர், மற்றும், மாகியைச் சுற்றியுள்ள ஆழியூர், சோம்பாலா, கல்லாயி ஆகிய இடங்களிலும் ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டு, மாலை பொதுக்கூட்டமும் நடைபெற்றிருக்கிறது.

## ஆந்திராவில்...

நெல்லூரைச் சேர்ந்த திப்பாராஜ் உபரி சத்திரத்தில் ஆயிரக்கணக்கான நெல்லூர்வாசிகள் கூடி தங்கள் கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றனர்.

நெல்லூர் டவுன் மண்டபத்தில் நெல்லூர் ஜனநாயக மாணவர் சங்கத்தின் சார்பில் 'கோவா தின'க் கூட்டம் நடைபெற்றிருக்கிறது.

## திருப்பதியில்...

திருப்பதியிலுள்ள மாணவர்கள் ஒன்றுதிரண்டு, போர்ச்சுகீசியப் போலீசாரின் அநாகரீகச் செயலைக் கண்டிக்கும் வகையில் ஒலி முழக்கங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் செய்திருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன், எம் ஏ